# லிபியா மீதான யுத்தம்



## இலங்கை சோ.ச.க. மற்றும் ஐ.எஸ்.எஸ்.ஈ நடத்தும் விளக்கக் கூட்டம்

இலங்கையில் சோசலிச சமத்துவக் கட்சி (சோ.ச.க.) மற்றும் சமூக சமத்துவத்துக்கான அனைத்துலக மாணவர்கள் (ஐ.எஸ்.எஸ்.ஈ) அமைப்பும் இணைந்து லிபியாவில் ஏகாதிபத்திய தலையீட்டின் தாக்கங்கள் பற்றிக் கலந்துரையாடுவதற்காக, கொழும்பில் ஏப்ரல் 19 அன்று ஒரு பகிரங்க கூட்டத்தினை நடத்தவிருக்கின்றன.

அமெரிக்கா, பிரிட்டன் மற்றும் பிரான்ஸும் இணைந்து லிபிய மக்களின் உயிர்களின் மீது அக்கறை கொண்டவர்களாக கூறிக்கொள்கின்ற போதிலும், ஏகாதிபத்தியத்தின் நலன்களுக்கு கூடுதலாகத் துணைபுரியக் கூடிய ஒரு லிபிய அதிகாரத்தினை நிறுவுவதே அவர்களது இராணுவ நடவடிக்கைகளின் உண்மையான நோக்கமாகும். உலகளாவிய ரீதியில் பழைய தீவிரவாதிகள் மற்றும் தாராளவாதிகளும், வல்லாதிக்க சக்திகள் கூறும் மனிதாபிமான சாக்குப்போக்குகளை திரும்ப திரும்ப உச்சரித்துக்கொண்டு, இந்த அண்மைய நவகாலனித்துவ மூர்க்கத்தனங்களுக்குப் பின்னால் அணிதிரண்டுள்ளனர்.

கொழும்பு பொது நூலக கேட்போர் கூடம்

லிபியாவில் நடக்கும் யுத்தம் அருகில் இருக்கும் பிராந்தியத்தில் மட்டுமன்றி, உலகம் முழுவதும் உள்ள தொழிலாள வர்க்கத்துக்கு பேராபத்தை முன்னறிவிக்கின்றது. இந்த இராணுவத் தலையீடானது மத்திய கிழக்கு பூராகவும் இடம்பெறும் புரட்சிகர எழுச்சிகளுக்கு எதிராகவும் மற்றும் மிகவும் பரந்தளவில் பூகோளத்தின் ஏனைய பகுதிகளிலும் இதையொத்த இயக்கங்களுக்கு எதிராவும் முன்னோடி நடவடிக்கைகளை ஸ்தாபிப்பதே ஆகும்.

சோ.ச.க./ஐ.எஸ்.எஸ்.ஈ கூட்டம் லிபிய யுத்தத்தை, லிபியாவின் வரலாறு, பிராந்தியத்தில் தற்போது இடம்பெறும் புரட்சிகர எழுச்சிகள் மற்றும் மத்திய கிழக்கு மற்றும் வட ஆபிரிக்காவில் எண்ணெய் மற்றும் எரிவாயு வளங்களுக்கான ஏகாதிபத்திய சண்டை ஆகிய சூழ்நிலைகளுக்குள் வைத்து கலந்துரையாடவுள்ளது. நாம் தொழிலாளர்கள், இளைஞர்கள், மற்றும் புத்திஜீவிகளை கொழும்பு கூட்டத்துக்கு வந்து, அங்கு இடம்பெறவுள்ள முக்கியமான கலந்துரையாடல்களில் பங்கேற்குமாறு அழைப்பு விடுக்கின்றோம்.

நேரமும் திகதியும் :
ஏப்ரல் 19, செவ்வாய்க்கிழமை பி.ப.4.00 மணி
இடம் : கொழும்பு பொது நூலக கேட்போர் கூடம்

World Socialist Web Site (wsws.org)

International Students for Social Equality (I.S.S.E)